விதிமுறையின் அடிப்படையிலேதான் கூடுதலாக 25 பேருந்துகளாவது இருந்தால்தான் அங்கே பணிமனை அமைக்க முடியும். ஆகவே இந்தச் செயற்குறிப்புக்கு இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு இடமில்லை என்று நான் குறிப்பிட்டேன்

முற்பகல் 10–10

திரு. மா.சா.மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தற்போது அங்கு ஆறு பேருந்துகள் ஓடிக்கொண்டிருப்பதாகவும், மேலும் 23 பேருந்துகள் ஆர்.எஸ். மங்கலம் வழியாகச் செல்வதாகவும் தன்னுடைய பதிலுரையிலே குறிப்பிட்டார்கள். 25 பேருந்துகள் ஓடினால்தான் அங்கு ஒரு பணிமனை ஏற்படுத்த வாய்ப்புள்ளதாகவும் கூறினார்கள். மேலும், ஒரு பணிமனைக்கும், இன்னொரு பணிமனைக்கும் இடையே குறைந்தபட்சம் 40 கிலோமீட்டர் தூரம் இருக்க வேண்டுமென்றும் கூறியிருக்கிறார்கள். இப்பொழுது தேவக்கோட்டையிலே பணிமனை இருக்கிறது. அதனையடுத்து, ஆர்.எஸ். மங்கலம் 35-வது கிலோ மீட்டரிலே இருக்கின்றது. பேருந்து எண்ணிக்கையும் கிட்டத்தட்ட இன்னும் ஒருசில மாதத்திலே நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே 25-ஐத் தாண்டி விடக் கூடிய ஒரு நிலைமை இருக்கின்ற காரணத்தாலே, அங்கே பணிமனை ஏற்படுத்த அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 25 பேருந்துகள் என்று எண்ணிக்கை உயர்ந்தவுடனேயே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை அடுத்த நிதியாண்டிலே பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 46, திரு. ஏ. தா. பொன்னுவேலு, இருக்கையில் இல்லை. திரு. கே.பி. ராஜூ கேட்கிறார். திரு. கே.பி. ராஜூ, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

46—

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை சிறப்பாக பராமரித்தல்.

***35558—திரு. ஏ. தா. பொன்னுவேலு:**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1994 நவம்பர் 8]

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைச் சிறப்பாகப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை சிறப்பாக பராமரிக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் பெரும்பாலும் இரவு நேரத்தில்தான் இயங்குகின்றன. அதுவும், மாவட்டம் விட்டு மாவட்டம் செல்லுகின்ற பேருந்துகளில் 12 மணி நேரம், 14 மணி நேரம்கூட பயணம் செய்கிறோம். பொது மக்கள் பயணம் செய்கிறார்கள். ஆகவே, மேற்படி திருவள்ளுவர் பேருந்தை இரவு நேரத்திலே இயக்குவதால் குளிர்சாதனத்தோடு கூடிய பேருந்தாகவும், படுக்கை வசதிகள் கொண்ட பேருந்தாகவும் மாற்றித் தந்தால் பயணிகளுக்கு மிகவும் வசதியாக இருக்கும். இதைப் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் அமைச்சரவர்கள் செய்து தருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே கேட்கப்பட்டிருக்கிற கேள்வி பராமரிப்பைப் பற்றியது. மாண்புமிகு உறுப்பினர், உல்லாசமாகச் செல்வதற்கு வழி இருக்கிறதா என்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. இன்டர்ஸ்டேட் என்று சொல்லப்படுகின்ற, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய புனிதப் பெயரால் உருவாக்கியிருக்கிற அந்தப் பேருந்தில் மட்டும்தான் குளிர்சாதனம் அமைத்து சொகுசுப் பேருந்துகளை நாம் இயக்கி வருகிறோம். மற்றொரு கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். படுக்கை வசதிகளோடு பேருந்துகளை இயக்க முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். தரை வழியிலே செல்கிற பேருந்துகளில் படுக்கை வசதிகளை அமைத்து பேருந்துகளை இயக்கி அது சாத்தியக்கூறு இல்லை என்று நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, பல்வேறு வழித்தடங்களிலே நாம் இயக்குகிறபொழுது அந்த வழித்தடங்களிலே அந்தப் பேருந்திலே படுக்கை வசதிகளுடன் அமைத்தால் அதிலே சௌகரியமாக இல்லை என்ற கருத்தின் அடிப்படையிலேதான், இயக்கப்பட்ட பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்கிற காரணத்தினாலே, அதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை.

[*1994* நவம்பர் *8*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தினுடைய பராமரிப்பு சமீபகாலத்தில் ஓரளவிற்குக் கவனம் செலுத்துவது குறைந்திருக்கிறது என்றே சொல்லலாம். சில பேருந்துகள் ஆங்காங்கே நிற்பதை நாம் பார்க்கிறோம். எப்பொழுது பார்த்தாலும் பிரேக் டவுனாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஜே.ஜே.டி.சி.-க்கு எந்த அளவிற்கு முக்கியத்துவத்தை அளிக்கிறார்களோ அந்த அளவிற்கு இதற்கும்—காரணம் தமிழ்நாடு பூராவும் போய்க்கொண்டிருக்கிறது இந்தப் போக்குவரத்துக் கழகம். ஆகவே, ஆங்காங்கே இந்த பிரேக் டவுன் ஆகாமல் பார்த்துக்கொண்டாலேயே தமிழ்நாட்டு மக்கள் மிகத் தைரியமாக இதிலே அமர்ந்து கொண்டு பயணம் செய்வதற்கான ஒரு வாய்ப்பு ஏற்படும். ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் -சிறப்பு நிதி ஏதாவது ஒதுக்கி, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை நிற்காத பஸ்ஸாக உடனடியாகச் செய்வதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கவனக்குறைவு என்று குறிப்பிட்டார்கள். கவனக் குறைவு அல்ல. இதிலே இயக்கப்படுகிற பேருந்திலே பல்வேறு சிக்கல் இதுவரையிலே இருந்திருக்கிறது. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திலே இயக்கப்படுகிற பேருந்துகளை காலை நேரத்திலும் நாம் இயக்குகிறோம்; இரவு நேரங்களிலும் நாம் இயக்கிக் கொண்டிருக்கிறோம். அதிலே பழுது பார்ப்பதற்குக் கொஞ்சம் காலம் வேண்டும் என்கின்ற அடிப்படையிலேதான் அனைத்துப் பேருந்துகளையும் இரவு நேரங்களிலே இயக்குவதற்காக நாங்கள் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம். ஒரு சில பேருந்துகளைத் தவிர. இதற்கு முன்னாலே *50, 60* சதவீதத்திற்கு மேற்பட்ட பேருந்துகளை இரவு நேரங்களிலும் நாம் இயக்குகிறோம்; பகல் நேரங்களிலும் இயக்குகிறோம். ஆகவே, அதிலே பழுது ஏற்படுகிறபொழுது அதைச் சீரான முறையிலே சீரமைக்க முடியாத சிக்கல் இருக்கிறது என்பதைக் கருத்திலே கொண்டு அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது.

முற்பகல் *10–15*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வெ. பழனிசாமி.

1994 நவம்பர் 8]

திரு. வெ. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டாக்டர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பெயரால் இயக்கப்படும் பேருந்துகள், வெளி மாநிலங்களுக்குச் செல்கிற நேரத்தில், அவை மிக அருமையாக நவீனப்படுத்தப்பட்டதன் விளைவாக, இந்தியாவிலேயே சிறப்பான முறையிலே பராமரிக்கிற போக்குவரத்துத் துறையைக் கொண்டது தமிழகப் போக்குவரத்துத் துறை என்றும், அவற்றைப் பொதுமக்கள் 'எக்ஸிபிஷனை' -பொருட்காட்சியைப் போல பார்க்கிற நிகழ்ச்சிகளையும் பத்திரிகையின் வாயிலாக நாம் பார்த்திருக்கிறோம். அதைப்போல, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளையும் சிறப்பான முறையிலே, நவீனமான முறையிலே பராமரித்து, அவற்றை இயக்குகிற வாய்ப்பை அரசு உருவாக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய புனிதப்பெயராலே இயக்கப்படுகிற பேருந்துகள், அண்டை மாநிலங்களான கர்நாடகாவிற்கும், கேரளராவிற்கும் செல்கிறபோது, அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள், அந்தப் பேருந்துகளை வேடிக்கை பார்ப்பதற்காகவே ஒரு மணி நேரம் அவற்றை அங்கேயே நிறுத்திவைக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்த அளவுக்கு அந்தப் பேருந்துகளின் வடிவமைப்பு மற்றும் அவற்றிலே இருக்கிற பல்வேறு குளிர்சாதன வசதிகள், இருக்கை வசதிகளைப் பார்த்து அவர்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதேபோன்ற நிலையை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திலும் உருவாக்க முடியுமா என்றால், இருக்கிற குறைந்த கட்டணத்தை வைத்துக் கொண்டு, அவ்வளவு சிறப்பான பேருந்துகளை நாம் இயக்க முடியுமா என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும். ஆகவேதான், ஓரளவுக்கு சொகுசுப் பேருந்துகளை இயக்க வேண்டுமென்று வருகிற நிதியாண்டில், 200 புதிய பேருந்துகளை இயக்குவதற்கு நாம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சி. இராமசுவாமி.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மிக அதிவேகமாகச் செல்கின்றன. அதனால் விபத்துகள் அதிகமாக ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. எனவே ஒரு Special Flying Squad அமைத்து,

Special Flying Squad அவற்றைச் சிறப்பாகப் பராமரிக்க, over speed-ஐ குறைத்து, வேகக் கட்டுப்பாடு செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேகமாகச் செல்லவில்லை என்றால்-கட்டை வண்டியில் செல்வதுபோல் இருக்கிறது என்று மக்களே அதில் ஏறுவதில்லை. ஆகவே, வேகத் தடைகள் செய்வதற்காக, குறைந்த வேகத்தில் செல்கிற அளவுக்கு, அவற்றில் உடனடியாக மீட்டர்கள் பொருத்தப்பட்டு இயக்கினால், அதனால் பல்வேறு சிக்கல்கள் இருக்கிற காரணத்தினால்தான், நல்ல வழித் தடங்களில் வேகமாகச் செல்வதும், பல்வேறு வாகனங்கள் எதிர்ப்புறங்களிலே இருந்து வருகிறபோது, இவற்றின் வேகத்தைக் குறைத்துச் செல்வதுமான வழிமுறைகளை நாம் இன்றைக்குச் செயலாற்றிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினரே, குறைந்த வேகத்தில் செல்கிறபோது, அவருடைய ஊருக்கு 4 மணி நேரத்திலே செல்ல வேண்டுமென்று கருதினால், ஏறத்தாழ 8 மணி நேரம் ஆகிறபோது, அவரே சொல்வார்; ஏன் இந்தப் பேருந்திலே ஏறி, இவ்வளவு நேரம் ஆகிறது என்று. ஆகவேதான், வேகத்தடை இல்லாமல், வேகத்தைக் குறைத்து நாம் இயக்காமல், குறிப்பிட்ட வேகத்திலே சிறப்பான முறையிலே இயக்க வேண்டுமென்று நாம் அறிவுரைகள் வழங்கியிருக்கிறோம். ஓட்டுநர்கள் அத்தனைப் பேருக்கும் மாதம் ஒருமுறை அறிவுரை வழங்கி, அந்தப் பேருந்துகளைச் சிறப்பான முறையிலே பராமரிப்பது, சிறப்பான முறையிலே இயக்குவது, அதேநேரத்தில் விபத்துகள் இல்லாமல், சிறப்பான முறையிலே இயக்குகிற ஓட்டுநர்களுக்கு சிறப்பு நிகழ்வாக 500 ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்குகிற திட்டங்களை நாம் கடைப்பிடித்து வருகிற காரணத்தினால், விபத்துகள் குறைக்கப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஜெ. பால கங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அவர்கள் பெயரால் வெளி மாநிலங்களுக்கு இயக்கப்படும் பேருந்துகள், இன்றையதினம் இந்தியாவிலேயே நவீனமான சொகுசுப் பேருந்துகளாக இருக்கின்றன. அதற்கு அடுத்தப்படியாக, வெளி மாநிலங்களுக்கு இயக்கப்படும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை, Sophisticated Super Delux Busகளாக விட, அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1994 நவம்பர் 8]

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுபற்றி அரசு பரிசீலித்து, வருகிற நிதியாண்டிலே அதைப்போன்ற பேருந்துகள் இயக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் எல்லாம் நெடுந்தூரப் பயணிகளின் பேருந்துகளாக இருக்கின்றன. அவற்றில் பொழுதுபோக முடியாமல் இருக்கின்றன. காசு கொடுத்து நாம் பஸ்ஸில் ஏறி, அங்குள்ள டி.வி.-யில் எம்.ஜி.ஆர். படம் போட வேண்டுமென்று கேட்டால், கேசட் இல்லை என்றும், டி.வி. ஓடவில்லை என்றும் சொல்லப்படுகிறது. மழை பெய்தால் தண்ணீர் உள்ளே வருகிறது...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி, நீங்கள் அதிலே வசதிகள் செய்யப்படுமா என்று சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவ்வாறு மழைபெய்து உள்ளே நீர் வருவதால், நீச்சல் அடித்துக் கொண்டு உள்ளே வருகிறார்கள். ஆகவே, அவ்வாறு மழை நீர் உள்ளே வராத அளவிற்கு---திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பஸ்கள் எல்லாம் வாங்கப்பட்டு நீண்ட காலமாகின்றன– அவற்றை 'கன்டெம்' ஆக்கிவிட்டு, புதிய பஸ்கள் வாங்குவதற்கு வேண்டிய ஏற்பாட்டை அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், நீண்ட தூரப் பயணிகள் இருக்கிறார்கள்; அவர்கள் ரொம்ப தூரம் போக வேண்டியிருக்கிறது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில், அந்தப் பயணிகளுக்காக நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக ஒரு 'மோட்டல்' கட்டப்பட்டது. செங்கோட்டை பஸ் ரூட்டில் கட்டப்பட்ட அந்த 'மோட்டல்' மூடப்பட்டு விட்டது. பயணிகளுக்காக அதை பழையபடி திறக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் வீடியோ கேசட் எல்லாம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு பஸ்ஸிலே ஏறிவிட்டு, அதிலே பார்த்துவிட்டு, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்தைப் போல அவர்

நினைத்துவிட்டார் போல் இருக்கிறது. அதேபோன்று மற்றொரு கருத்தையும் சொல்லியிருக்கிறார். பராமரிப்பைப் பொறுத்தவரை, பழைய பேருந்துகள் எல்லாம் அதிலே இருக்கின்றன என்று சொன்னார். நாம் பழைய பேருந்துகளை அடிக்கடி மாற்றிக் கொண்டேதான் வருகின்றோம். 7 இலட்சம் கிலோமீட்டர் ஓடினால் அந்தப் பேருந்துகளை மாற்ற வேண்டுமென்று அறிவுரை வழங்கி அதை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலேதான் இன்றைக்கு 200 புதிய பேருந்துகளை வாங்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். வருகின்ற ஜனவரி மாதத்திற்குப் பிறகு வரும் பட்ஜெட் கூட்டத் தொடருக்கு நீங்கள் வருகின்றபோது உல்லாசமான பேருந்திலே நீங்கள் வருகின்ற வாய்ப்பும் இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, மோட்டல்கள் மூடப்படுகின்றன என்று சொன்னார்கள். இதில் பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. தனியார் மோட்டல்களுக்கும், நம்முடைய மோட்டல்களுக்கும் செயல்பாட்டில் பல இடர்ப்பாடுகள் இருக்கின்றன. தனியார் மோட்டல்களுக்குச் செல்லுகின்றபோது அங்கே வருகின்றவர்களுக்குப் பல்வேறு சலுகைகள் அளிப்பது, அவர்களைக் கவனிக்கின்ற வகையில் பல்வேறு நிலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், நாம் மோட்டல் நடத்துகின்றபோது குறைந்த கட்டணத்திலே சிறப்பான உணவு வகைகளை வழங்க வேண்டும் என்று கருதுகின்றோம். அப்படிப்பட்ட நிலை இருக்கின்ற காரணத்தினால்தான் சில மோட்டல்கள் மூடப்பட்டிருக்கின்றன. அதையும் உடனடியாகத் திறப்பதற்கு நாங்கள் நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 47, திருமதி க. பழனியம்மாள், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

47—

தமிழ்நாடு சரிகை நிறுவனத்தை விரிவுபடுத்தல்

***23963—திருமதி க. பழனியம்மாள்:**

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா---

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் தமிழ்நாடு சரிகை நிறுவனத்தை விரிவுபடுத்த அரசு முன்வருமா ?